**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 33/2021**

Deposition of **<u>PW.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 23.06.2026 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பிருந்தா | Husband Name | : குணசேகரன் |
| Village | : பின்னனூர் | Taluk | : தலைவாசல் |
| Calling | : | Age | : 45 |

துவக்க நேரம் : 12.25 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதிகள் தரப்பு முதல் விசாரணை **(**இ.ம.எண்**.10/2025, 11/2025** அனுமதிக்கப்பட்டதின் பேரில்**) :**</u>

1. பின்னனூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று ஆஜராகி உள்ளேன். எனக்கு பின்னனூர் கிராம புல எண்.99/3B1, 99/3B2, ஆகிய நிலங்களுக்குண்டான UDR பட்டா, அ பதிவேடு , தற்போதைய பட்டா மற்றும் அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. ச.எண்.99/3B1 -ற்கான UDR பட்டா, பட்டா எண்.166 செ.பெரியான் என்பவரது பெயரில் பதிவாகியுள்ளது. அந்த பட்டாவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் நீ.ம.சா.ஆ**.1- (Ex.X1)-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்கள். 99/3B1, 99/3B2 ஆகியவற்றிக்கான அ பதிவேடு செ. பெரியான் , பா. வடிவேலு ஆகியோர்கள் பெயரில் பதிவாகியுள்ளது. அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ**.2- (Ex.X2) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணிற்கான தற்போதைய பட்டா, பட்டா எண்.620 ஆறு நபர்கள் பெயரில் பதிவாகியுள்ளது. அந்த ஆவணத்தின்

சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.**3-(Ex.X3) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலத்திற்கான அடங்கல் மேற்படி பட்டாதரர்கள் பெயரில் உள்ளது. அதன் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.**4-(Ex.X4) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னனூர் கிராம ச.எண்.99/3B2-ற்கான UDR பட்டா, பட்டா எண்.261 பா. வடிவேலு என்பவரது பெயரில் பதிவாகியுள்ளது. அந்த பட்டாவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் நீ.ம.சா.ஆ.**5- (Ex.X5) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணிற்கான தற்போதைய கணினி பட்டா, பட்டா எண்.547 மூன்று நபர்கள் (வாதிகள்) பெயரில் பதிவாகியுள்ளது. அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.**6-(Ex.X6) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலத்திற்கான அடங்கல் மேற்படி பட்டாதாரர்கள் பெயரில் உள்ளது. அதன் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.**7-(Ex.X7) -** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**1, 2** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:-**</u> ச.எண்.99/3B1, 99/3B2 ஆகிய வெவ்வேறான சொத்துக்கள் என்றாலும் அதன் உரிமையாளர்கள் வெவ்வேறானவர்கள் என்றாலும் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

வாதி தரப்பு மறுவிசாரணை இல்லை.

முடிவு நேரம்: 12.45 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.33/2021, Dt.23.06.2026.